நாட்டை வல்லரசாக்கும் அறிவுப் புரட்சி

ரூ.15/-

# பசுமை பாரதம்

மலர்-12, இதழ்-4, ஏப்ரல்-2019



## நாட்டிலேயே முதன்மை தொகுதியாக தேனியை மாற்றி காட்டுவேன்

தேனி அதிமுக வேட்பாளர்

ப.ரவீந்திரநாத்குமார்

வாக்குறுதி

**தேனிக்கு இரயில் சேவை மீண்டும் வருமா?**

## 40 தொகுதிகளில் யாருக்கு வெற்றி?

### பசுமை பாரதம் தேர்தல் கணிப்பு!



# தமிழ்நாடு வாகன புகை பரிசோதனை மையங்கள் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம்

தமிழ்நாடு வாகன புகை பரிசோதனை மையங்கள் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஆலோசனைகூட்டம் கரூரில் 7-04-2019 நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு அரசு ஆன்லைனில் வாகனபுகைபரிசோதனை சான்று வழங்கும் தி ட்டத்திற்கு இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக செயல்படுத்த நடவடிக்கை எடுத்த தமிழ்நாடு அரசுக்கும், தமிழ்நாடு போக்குவரத்து ஆணையர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தும், தமிழ்நாடு முழுவதும் உள்ள 345 மையங்களில் வாகன புகை பரிசோதனை கருவிகள் மற்றும் கணினி வழி மென்பொருள் பயன்படுத்த கால அவகாசம் கேட்டு போக்குவரத்து ஆணையர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்படவேண்டுமென முடிவு செய்யப்பட்டது. இந்தியா முழுவதும் வாகன் 4 மென்பொருள் மூலம் இணைக்கப்படும்போது தேசிய தகவல் மையம் இணையதளம் திடிரென துண்டிக்கபடுவதால் வாகன புகை பரிசோதனை செய்வதில் அதிக காலதாமதம் ஏற்படுகிறது. தேசிய தகவல் மையத்தின் இணைய தொடர்பு வேகத்தை அதிகபடுத்தவும், இணைய தொடர் வசதியை மேம்படுத்தவும் கோரிக்கை வைத்து. அதுவரை தற்போது வழங்கும் கணினி வழி புகை பரிசோதனை சான்றிதழ் வழங்க அனுமதிக்க வேண்டுமெனதமிழ்நாடு போக்குவரத்து அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. கடந்த 25 ஆண்டுகளாக வாகன புகை பரிசோதனைக்காக கட்டணம் உயர்த்தப்படவில்லை. வாகன புகை பரிசோதனை இயந்திரம் மேம்படுத்தல், கணினி மற்றும் இணைய தொடர்பு மேம்படுத்தல் பரிசோதனையாளர் சம்பளம் ஆகியவற்றை நடைமுறைபடுத்த லட்சக்கணக்கில் செலவு ஏற்படுவதால் தொடர்ந்து புகை பரிசோதனை மையங்கள் மறக்கமுடியாத சூழ்நிலையை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு வாகன புகை பரிசோதனைக்கான கட்டணத்தை உயர்த்தவேண்டுமென தமிழ்நாடு வாகன புகை பரிசோதனை மையங்களின் கூட்டமைப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த கூட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் தனியார் வாகன புகை பரிசோதனை மையங்களின் உரிமையாளர்கள் கலந்துகொண்டனர். மாநில நிர்வாகிகள் ராமகிருஷ்ணன், ராஜசேகரன், நந்தகோபால், பாலாஜி, கண்ணன், கரூர் ரமேஷ் மற்றும் அனைத்து மாவட்ட தலைவர் கள் கலந்துகொண்டனர்.



# தமிழ்நாடு போக்குவரத்து ஆணையரின் அவசர ஆன்லைன் புகை சான்று உத்தரவு......

- **அவதிப்படும் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள்**
- **வாகன புகை பரிசோதனை மையங்கள் மூடப்படுவதால் சுற்று சூழல் மாசுபடும் அபாயம்!**

தமிழ்நாடு முழுவதும் 65 வட்டாரபோக்குவரத்து அலுவலகம் 45 பகுதி நேர மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் உள்ளது. தமிழகம் முழுவதும் 350 தனியார் வாகன புகை பரிசோதனை மையங்கள் அனைத்து வாகனங்களுக்கு கணினி மூலமாக வாகன புகை பரிசோதனை சான்று வழங்கி வருகின்றன. மத்திய அரசாங்கம் அனைத்து வாகன புகை பரிசோதனை மையங்களை வாகன் மென்பொருள் மூலமாக இணைத்து பரிசோதனை முறையில் செயல்படுத்தி வருகிறது. முதல் கட்டமாக மூன்று மாநிலங்களில் (உத்திரபிரதேசம், மஹாராஷ்ட்ரா,மேற்கு வங்காளம்,) இத்திட்டம் செயல்படுத்தி வருகிறது. ஏப்ரல் 1 ந்தேதி முதல் அனைத்து மாநிலங்களில் வாகன் மென்பொருள் மூலம் வாகன் புகை பரிசோதனை சான்று வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்நிலையில் மத்திய அரசாங்கம் National Information Centre (தேசிய தகவல் மையம்) எந்த வித முன்னேற்பாடு இன்று வரை 30 மாநில தமிழ்நாடு உட்பட செய்யப்படவில்லை. ஆனால் இன்று முதல் தமிழ்நாடு முழுவதும் ஆன்லைனில் புகை சான்று வழங்கவேண்டும் என தமிழ்நாடு போக்குவரத்து ஆணையர் அவர்கள் வாய்மொழி உத்திரவிட்டுள்ளார். இதனால் சுமார் 350 தனியார் வாகன புகை பரிசோதனை மையங்கள் இயங்க முடியாமல் உள்ளது.

சுமார் 3500 வாகனங்கள் தினந்தோறும் வாகன தகுதி சான்றுக்கு தமிழகம் முழுவதும் வட்டார போக்குவரத்து அலுவலகங்களுக்கு வருகின்றன. மற்றும் வாகனங்கள் ஆறு மாதத்திற்கு ஒருமுறை வாகன புகை பரிசோதனை சான்று அவசியம். வாகன புகை பரிசோதனை சான்று இல்லாமல் வாகனம் ஓட்டினால் வாகன உரிமையாளருக்கு ரூபாய் 1000 முதல் 3000 வரை அபராதம் விதிக்கப்படும். மற்றும் போக்குவரத்து வாகனங்கள் தகுதி சான்று ரத்து செய்யப்படும். தமிழக அரசு திடீரென இந்த ஆன்லைன் புகை சான்று அமுல்படுத்தியதால் (மத்திய அரசாங்கம் வாகன் மென்பொருளில் தேசிய தகவல் மையம் இன்னும் ஆன்லைனில் தமிழகத்தை இணைக்கவில்லை) அனைத்து வாகனங்களுக்கு சான்று வழங்க முடியாத நிலை



TRANSPORT DEPARTMENT

From
Transport Commissioner,
Chepauk,
Chennai-9.

To
All Zonal Officers,
All Regional Transport Officers,
All Unit Office,
Nic Centre.

Letter No. 50166/C3/2018, dated: 27.03.2019

Sub: Compliance of Hon'ble Supreme court's direction regarding linking of PUC data (emission related data) with the VAHAN database

Ref: 1) A letter received from Under Secretary to Govt. Of India, Ministry of Road Transport and Highways, Transport Bhawan-1, Parliament street, New Delhi-110001, dated: 01.10.2018.
2) This office letter of even No. dated 14.03.2019

I invite your attention to the references cited wherein requested to upload all the emissions test data in Vahan database to ensure the online updation of the integration of PUC centres in Tamil Nadu w.e.f. 01.04.2019.

2) And all the Zonal Officers, Regional Transport officers, and Motor Vehicle Inspectors of the Unit Offices were requested to ensure the online updation of the integration of PUC certificate with VAHAN database from the period of 1st April 2019 in their jurisdiction in their nearest PUC centres.

3) Hence all officers are requested to inspect the PUC centres in their jurisdiction as to whether the Emission testing centre updated the integration of online and send the report to this office in the following prescribed format.

| Sl No | Name of the Office | Total No. of PUC centres in the Jurisdiction | No. of PUC Centres with online updation | No. of PUC Centres not yet online updated | Remarks |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |

By Order

Siva Pon Sathianathan,
Addl. Transport Commissioner(RS).

தமிழக போக்குவரத்து ஆணையர் சுற்றறிக்கை ..... 25032019




முதல் மூன்று மாநிலங்கள் ஆன்லைனில் சான்று வழங்க தேசிய தகவல் மையம் வாகன் மென்பொருளில் செயல்படுத்தப்பட்டது....

ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு போக்குவரத்து ஆணையர் அவர்கள் தனியார் வாகன புகை பரிசோதனை மையங்களுக்கு போதிய அவகாசம் மற்றும் பயிற்சி வழங்கவேண்டும் என தனியார் வாகன புகை பரிசோதனை மையங்களின் கூட்டமைப்பு தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.




மஹாராஷ்ட்ராவில் கையால் எழுதி வழங்கும் வாகன புகைபரிசோதனை சான்று.........

இணைபோக்குவரத்து ஆணையர் மதுரை அவர்களின் ஆன்லைன் புகை சான்று கட்டாயம் என சுற்றறிக்கை..26032019

**MOST URGENT**

**TRANSPORT DEPARTMENT**

| From | To |
|---|---|
| Dr M.Jeyasankaran, Joint Transport Commissioner, Madurai. | All Regional Transport Officers / Motor Vehicle Inspectors in Unit Office, Madurai Zone. |

Letter No:125/A2/2019. Dated: 26.03.2019.

| | |
|---|---|
| Sub: | Compliance of Hon'ble Supreme court's direction regarding linking of PUC data (emission related data) with the VAHAN database on or before 01.04.2019 – Reg. |
| Ref: | 1. Transport Commissioner Letter in R.No:50166/C3/2018 dated 07.01.2019. 2.This office letter in even number dated 11.01.2019 and 13.03.2019. 3.Transport Commissioner Letter in R.No:50166/C3/2018 dated 25.03.2019. |

*****

In the earlier letters of this office in the second reference cited, it is requested to ascertain the online updation of the linkage of PUC certificates with newly created VAHAN database and the guidelines for the updation of PUC in the VAHAN database was also communicated and it is also requested to complete the updation work in the PUC centers on or before 01.04.2019.

At this juncture the Transport Commissioner, Chennai letter in the Third reference cited, it is insist to complete the updation work in the emission centers before 31.03.2019 and requested to send the action taken report in the given prescribed Perfoma on or before 01.04.2019.

For Joint Transport Commissioner,
Madurai.

Enclosure:
1.Transport Commissioner Letter dated 25.03.2019.

Copy submitted to-Transport Commissioner, Chennai for kind information.

தழகத்தில் அனைத்து தனியார் வாகன புகை பரிசோதனை மையங்கள் இயங்காத காரணத்தினால், வாகன புகை மாசு அதிகரிக்கும்



நிலை ஏற்பட்டுள்ளது. தேர்தல் நேரத்தில் வாகன உரிமையாளர்கள் போக்குவரத்து வாகனங்களை இயக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் வாகன உரிமையாளர்களுக்கும் தனியார் வாகன புகை பரிசோதனை மைய உரிமையாளர்களுக்கும் புகை சான்று வழங்குதல் சம்பந்தமாக சண்டை மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படுகிறது. வாகன உரிமையாளர்கள் நடு ரோட்டில் வாகனத்தை நிறுத்தி போராட்டம் நடத்தபோவதாக தெரிவிக்கின்றனர். தமிழக அரசு இந்த விசயத்தில் தலையிட்டு வாகன உரிமையாளர்களின் மற்றும் தனியார் வாகன புகை பரிசோதனை மையங்களின் உரிமையாளர்களின் நலனையும் கருத்தில்கொண்டு நல்ல முடிவு எடுக்கவேண்டுமென்பது சமூக ஆர்வலர்களின் கோரிக்கையாகும்.

*01-04-2019* முதல் சண்டிகர் மாநிலம் ஆன்லைனில் சேர்க்கப்பட்டுள்ளது. இன்னும் *28* மாநிலங்கள் தமிழ் நாடு உட்பட.... பல மாநிலங்கள் வாகன் மென்பொருளில் தேசிய தகவல் மையத்தால் சேர்க்கப்படவில்லை. தமிழகம் ஆன்லைனில் சேர்க்கபடாத நிலையில் தனியார் வாகன புகை பரிசோதனை மையங்கள் சான்று வழங்க இயலாத நிலையில் உள்ளனர்.

**- கம்பம் S. சாகுல் ஹமீது**

# கம்பத்தில் தனியார் பார்களில் போலி மதுபானங்கள் சப்ளை

கம்பம் பகுதிகளில் உள்ள தனியார் பார்களில் பெங்களூரு போலி மதுபானங்கள் விற்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது. அத்துடன் மனமகிழ் மன்றம் என்ற பெயரில் விடிய, விடிய நடக்கும் சூதாட்டத்தை போலீசார் கண்டுகொள்வதில்லை என்றும் குற்றம் சாட்டப்படுகிறது. தேனி மாவட்டத்தில் கம்பம் மிகப்பெரிய வளர்ந்து வரும் நகரமாக உள்ளது. இதன் அருகில் அண்டை மாநிலமான கேரளா உள்ளதால் தினந்தோறும் கார்கள், டூவீலர்களில் அங்கிருந்து சரக்கு சாப்பிட வருபவர்கள் அதிகம். தமிழகத்தில் ஹாயாக சுற்றிவிட்டு அப்படியே தனியார் பார்களுக்கு செல்கின்றனர். கம்பம், அனுமந்தன்பட்டி, க.புதுப்பட்டி, காமயகவுண்டன்பட்டி, கூடலூர் உள்ளிட்ட ஊர்களில் மட்டும் சுமார் 10க்கும் மேற்பட்ட இடங்களில் தனியார்களுக்குச் சொந்தமான பார்கள் உள்ளன. இவற்றிற்கு மாவட்ட நிர்வாகமே லைசென்ஸ் கொடுத்து இயக்க அனுமதி அளித்துள்ளது. இந்த பார்களும், அரசு டாஸ்மாக் கடை திறக்கும் நேரமான மதியம் 11 மணிக்கு திறக்க வேண்டும். இரவு 11 மணிக்கு அடைக்க வேண்டும் என்பது தான் விதி. ஆனால் தனியார் பார்கள் பல 24மணிநேரமும் திறந்தே இருக்கின்றன. இதனால் கேரளாவிற்கு சுற்றுலா செல்லக்கூடிய வெளிமாவட்ட, மாநில சுற்றுலா பயணிகளுக்கு தடையில்லாமல் சரக்கு கிடைக்கிறது.

இந்த சரக்குகள் கம்பெனி சரக்குகளா அல்லது பெங்களூருவில் இருந்து தயாரித்து கொண்டு வரப்படும் போலி சரக்குகளா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இதில் குறிப்பிட வேண்டிய விஷயம் அனைத்து சரக்குகளையும் உடைத்து உதிரி சரக்காகவும் விற்பனை செய்கின்றனர். இதே போல மனமகிழ் மன்றங்கள் என லைசென்ஸ் வாங்கும் தனியார் பார்களில் விளையாட்டு உபகரணங்கள் வைத்திருக்கவேண்டும். பணம் வைத்து சீட்டு விளையாடக்கூடாது என்ற விதி உள்ளனது. ஆனால், கம்பத்தில் இந்த விதிகளை மனமகிழ் மன்றங்கள் மதிப்பதில்லை. இதனால் பலர் பெரும்பணத்தை இழந்தும், குடும்பங்களை இழந்தும் தவித்து வருகிறார்கள். பார்களில் அனுமதியின்றி சீட்டாட்டம் விடிய, விடிய நடக்கிறது. பணம் வைத்து நடக்கும் இந்த சூதாட்டத்தை ஒடுக்கவேண்டிய பொறுப்பு உள்ளூர் காவல்நிலையத்திற்கு உள்ளது.

ஆனால், உரிய கவனிப்பால், அவர்கள் எதனையும் கண்டும், காணாமலும் உள்ளதாக புகார் கூறப்படுகிறது. உத்தமபாளையத்தில் மதுவிலக்கு அமுலாக்கத்துறை காவல்நிலையம் இயங்கி வருகிறது. இதன் இன்ஸ்பெக்டர், எஸ்.ஐ. தலைமையிலும் மாவட்ட அளவில் உள்ள ஏடிஎஸ்பி தலைமையிலும் அடிக்கடி ரெய்டு நடத்தி ஆய்வு செய்ய வேண்டும். இதில் விதிமீறல்கள் நடந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து சீல் வைக்க பரிந்துரைக்க வேண்டும். ஆனால் கம்பத்தில் அப்படி எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. இதனால் அப்பாவி கேரளாவாசிகள் தினந்தோறும் தங்களது பணத்தை இழந்து தவிக்கின்றனர். உள்ளூர் போலீஸ் முதல் உளவு போலீஸ் வரை இத்தகைய முறைகேட்டை கண்டு கொள்ளாமல் உள்ளனர். எனவே, தேனி மாவட்ட எஸ்.பி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர். இதற்கிடையே தேனியை சேர்ந்த விக்னேஷ். என்பவர், 'தேனியில் சில மனமகிழ் மன்றங்களில் பணம் வைத்து சட்டவிரோதமாக சூதாடுகின்றனர். தோல்வியடைவோரை தடுத்து வைக்கின்றனர். குடும்பத்தினர் பணம் கொடுத்து, மீட்டுச் செல்கின்றனர். ஏழைகள் பாதிக்கின்றனர். சட்டவிரோத மனமகிழ் மன்றங்கள் மீது நடவடிக்கை எடுக்க போலீசாருக்கு உத்தரவிட வேண்டும்,' என உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு செய்தார். நீதிபதிகள் என்.கிருபாகரன், எஸ்.எஸ்.சுந்தர் அமர்வு தேனி கலெக்டர், எஸ்.பி.,க்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர்.

**- கம்பம் S. சாகுல் ஹமீது**

